**குண்டசாலை பிரதேச சபை - 2024**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குண்டசாலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது

குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் கண்டி மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 4,837,105 ஆன நீர் உபகரணங்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி திகுதியில் உள்ளவாறு கையிலுள்ள இருப்பின் கீழ் நடைமுறை சொத்துக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஜுலை முதல் திசெம்பர் மாதங்களுக்கு உரிய ரூபா 103,035,964 ஆன முத்திரை கட்டணங்கள் மற்றும் செப்டம்பர் முதல் திசெம்பர் மாதங்களுக்குரிய ரூபா 1,723,010 ஆன நீதிமன்ற தண்டப்பன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கட்டிடங்கள் நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 3,513,264 தொகை மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 10 கணக்கு விடயங்களின் மீதிகள் பயன்பாட்டு ஆவணங்கள் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பிடும்போது | வேறுபாடுகள் பரீட்சிக்கப்பட்டு சரி செய்யப்படும் என்பதாக. | கணக்கு மீதிகள் பயன்பாட்டு அட்டவணை களுடன் |

| | |
|---|---|
| மொத்தம் ரூபா 54,287,755 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,650,608 ஆன பெறவேண்டிய சம்பள மீள்நிரப்பு மீதிக்குரிய பதிவேடுகள் அட்டவணைகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாது இருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சம்பளம் மீள் நிரப்பலுக்குரிய சரியான பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அட்டவனைகள் பேணப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பாராளுமன்ற சட்டம்** | | | |
| (i) | **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் கட்டளைச் சட்டம்** | | | |
| | 20 ஆம் பிரிவு | ஆதனங்களுக்குரிய வீத வரி மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உரிய காலத்தில் ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ii) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 19 (1) (xiii) ஆம் பிரிவு | அமைச்சரின் அனுமதியின்றி சபையில் மந்தாரா நான்கு மாடி கட்டிடம் மற்றும் ரஜபொல காணி கட்டிடங்கள் என்பன நீண்ட காலமாக ரூபா 33,234,556 | உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் சுற்றறிக்கையின் பிரகாரம் குத்தகைக்கு | சட்ட ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | வழங்கியுள்ளதாக. | |
| (iii) | 2015 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1955/7 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டம் 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்புரை) சட்டம் | | | |
| | முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான உப உறுப்புரை | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முச்சக்கர நிறுத்தமிட நிலையங்களில் இருந்து 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 3,387,845 ஆன முச்சக்கர வண்டி நிறுத்தல் கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **நியதிகளும் நியதிச் சட்டங்களும்** | | | |
| | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | 218 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | கணிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களில் இருப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | (i) நி.பி 394 | மறுக்கப்பட்ட ரூபா 156,242 ஆன பெறுமதியான 10 காசோலைகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மேலும் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைகள் எடுப்பதாக. | மறுக்கப்பட்ட காசாலைகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) நி.பி. 571(3) | 2019 முன்னிருந்து காலப் பகுதியில் காலாவதியான ரூபா 8,019,281 ஆன வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 110,005,496 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 74,705,125 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 58,718,925 | 60,040,290 | 69,753,066 | 47,852,100 | 42,815,634 | 33,079,249 | 16,686,937 | 57,564,875 |
| (ii) | வாடகை | 22,240,705 | 19,433,458 | 20,635,619 | 6,282,717 | 8,781,619 | 10,039,619 | 14,279,596 | 7,484,679 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங் கள் | 7,100,000 | 3,290,736 | 3,290,736 | 14,680,625 | 5,985,000 | 5,983,999 | 5,983,999 | 14,680,625 |
| (iv) | ஏனைய வருமானம் | 137,499,000 | 143,522,256 | 212,426,624 | 113,734,039 | 213,435,979 | 213,435,979 | 29,550,426 | 182,638,407 |
| | மொத்தம் | 225,558,630 | 226,286,740 | 306,106,045 | 182,549,481 | 271,018,232 | 262,538,846 | 66,500,958 | 262,368,586 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) வீதவரி**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 45,863,254 ஆக காணப்பட்டது. அதில் அலகொன்று நிலுவை வீதவரி ரூபா 5,000 ஐ மிகைத்த 2680 வீதவரி ஆதனங்களில் இருந்து ரூபா 29,217,921 ஆன நிலுவையை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் | ஆதனங்களைத் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2022 முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 171 கட்டிட அனுமதி பத்திரங்களுக்குரிய நிர்மாணம் தொடர்பில் பின் தொடர் நடவடிக்கை எடுத்து வீதவரி அறவிடப்பட்டு இருக்கவில்லை. | குறித்த பிரிவுகளுக்கு அறிவூட்டி வீத வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஆதனங்களை மதிப்பீடு செய்து புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வீத வரி அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | பழைய சபை வளவில் அமைந்துள்ள புதிய நான்கு மாடி கட்டிடத்தில் 2018 முதல் 2020 காலப்பகுதிக்காக நிலுவை குத்தகை வாடகை ரூபா 9,000,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | திருத்த நடவடிக்கை களுக்காக செலவிடப்பட்ட செலவினத்திலிருந்து நிலுவைத் தொகையை கழித்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதால் நிலுவை தொகை காணப்படுவதாக. | பொருத்தமான பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ii) | சபைக்குரிய ரஜபோல காணி கட்டிடங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளாமல் 2021 ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கவில்லை என்பதாக. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொண்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 8,315,957 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த ரஜரூப சந்தைக் கட்டிடம் 2021 நவம்பர் 1 ஆந் திகதி முதல் காலஎல்லையொன்று குறிப்பிடாமல் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த குத்தகையாளர் ஒருவரால் சபையின் அனுமதியின்றி குறித்த கட்டிடத்தை உடைத்து அகற்றி அதில் 10023 சதுரஅடி அளவிலான இரண்டு மாடிக கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து இருந்தார் சபை இது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் கட்டிடத்தை உடைத்து அகற்ற முடியும் என்பதாக. | அங்கீகாரம் ஒன்றில்லாமல் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்** | | |
| (i) குண்டசாலை பிரதேச சபை மற்றும் பாத்ததும்பர பிரதேச சபை ஒன்றிணைந்து கைச்சிடப்பட்டு 2016 ஆண்டில் ஜப்பான் உதவியின் ஆரம்பிக்கப்பட்ட அலுத்வத்த உர தயாரிப்பு நிலையத்தில் சேதன உர செயற்பாடு முறையாக நிறைவேற்றுவதற்குரிய சேகரிக்கப்பட்ட உக்கும் கழிவுப் பொருட்கள், அரைக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட கழிவுப் பொருட்கள் என்பவற்றை மழையில் நனையாமல் களஞ்சியப்படுத்துதல் அரைக்கப்பட்ட கழிவுகள் நிர்ணயிக்கப்பட்ட நியமத்தின் உடனாக உக்கல் அடைவதற்கு தேவையான வசதிகளை செய்தல் மற்றும் உரத்தை முறையான தரத்துடன் களஞ்சியப்படுத்தல் போன்ற அத்தியாவசிய விடயங்களுக்காக கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்களின் செயற்திறனின்மை அடிப்படையில் திட்டமிடப்பட்ட பிரகாரம் அக்கட்டிடத்தை நிர்மாணிக்க முடியாமல் இருந்தது. | நிதி ஏற்பாடு இல்லை என்பதாக. | உரிய தரத்துடன் சேதன உர உற்பத்தி செய்யக் கூடிய வகையில் குறித்த கட்டிடம் மற்றும் சுற்றாடல் தயார் செய்யப்பட வேண்டும். |
| (ii) அலுத்வத்த திண்ம கழிவு பொருள் திட்டத்தின் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் மூலம் எரிபொருள் உற்பத்தி செய்யும் பரீர்சார்த்த திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் ஜனவரி 28 ஆம் திகதி சபை மற்றும் தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் தனியார் கம்பெனியில் சிக்கல் ஒன்று காரணமாக செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் இயந்திரங்களை பொருத்துவதற்காக ரூபா 29,782,203 தொகை செலவிடப்பட்டு சபை காணியில் மண்வெட்டப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது மேலும் ஒப்பந்தம் நிறுவனம் உடன்படிக்கையை மீறி 04 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் உடன்படிக்கை மீறியமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை<br>இத்திட்டத்திற்காக 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி ரூபா 800,925 செலவிடப்பட்டு மின் கேபிள் ஒன்று | செயற்திட்டத்தை எதிர்காலத்தில் செயல்படுத்துவதாக. | சிக்கல்களைத் தீர்வு செய்து செயற் திட்டத்தில் உள்ள தேவைப்பாடுகளை இனங் கண்டு முறையான நடைமுறை ஒன்றின் பிரகாரம் சாத்தியவள ஆய்வொன்றின் பின்னர் முறையான உடன்படிக்கை ஒன்றும் கண்காணிப்பொன்றின் கீழும் திட்டமிடப்பட்ட செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்வனவு செய்யப்பட்டு கழிவுப்பொருள் தொகுதிக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய பெக்கோ இயந்திரம் அலுத்வத்த கழிவுத் தொகுதியில் சேவையில் ஈடுபட்டிருக்கையில் முன்னைய ஆண்டில் தீ விபத்துக்கு உட்பட்டு விபத்து ஒன்று நடைபெற்று இருந்தது இயந்திரத்தை திருத்து வதற்காக ரூபா 2,110,099 தொகை கொடுப்பணவு செய்யப்பட்டிருந்த போதும் காப்புறுதி இழப்பீடாக ரூபா 962,523 கிடைத்திருந்தது சபைக்கு ஏற்பட்ட ரூபா 1,147,576 ஆன நட்டம் தொடர்பாக நிதி பிரமாணம் 104(4) பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு இருக்கவில்லை. | நி.பி பரிசோதனை மேற்கொள்வதாக. | நி.பி 104(4) பரிசோதனை அறிக்கையில் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 102,570, 451ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 37,031, 262ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரியதாக காணப்படும் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 14,701, 203ஆக இருந்தது. | அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 179,742,976 ஆன செலவின கடன் கொடுத்தோர் மற்றும் நிர்மாண கடன் கொடுத்தோர் மீதிக்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அம்மீதிகள் தீர்வு செய்யப்பட்டும் இருக்கவில்லை. | ஆராய்ந்து பார்த்து எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டில் பின்னர் மீளாய்வாண்டு இறுதி வரையான காலப்பகுதியில் சபை அதிகார பிரதேசத்தில் புதிய அபிவிருத்தி பிரதேசங்கள் இனங் காணப்பட்டு வர்த்தமானில் வெளியிடப்பட்டு வீதவரி அறவிடப்பட்டு இருக்கவில்லை. | சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக. | அபிவிருத்தி பிரதேசங்கள் வர்த்தமானியில் வெளியிடப் பட்டு வருமானம் அறவிடப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 4,500,000 பெறுமதியான கெப் வண்டி ஒன்று 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | வரிசை அமைச்சிடம் வினவப்பட்டுள்ளது. | பொருத்தமான அரச நிறுவனம் ஒன்றுக்கு கையளிப்பதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் ரூபா 46 மில்லியன் செலவழித்து அலுத்வத்த கழிவுப்பொருள் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மலக்கழிவு சுத்திகரிப்பு முறைமை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சபை தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கலந்துரையாடுவதாக. | கழிவு பொருள் சுத்திகரிப்பு முறையை விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 20 காணி துண்டுகளினதும் 02 வாகனங்களினதும் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | கையேற்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் சட்டரீதியாக கையேற்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது அதில் 06 பதவிகளில் 08 வெற்றிடங்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 19 மிகைகளும் காணப்பட்டன. | பதவியணியினர் போதியளவில் இல்லையென்பதாக. | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் மிகைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் வீதி தொழிலாளர்கள் சுகாதார தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர் என மொத்தம் 53 பேர் தமக்குரிய கடமைகளில் ஈடுபடாமல் அலுவலகம்சார்ந்த சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவியணியினர் போதியளவில் இல்லையென்பதாக. | பதவியணியினரை நிரந்தர கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2003 ஆம் ஆண்டில் சேவை விட்டுச் சென்ற உத்தியோகத்தொருவரிடம் இருந்து ரூபா 178,471 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |